


### முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு

# நிறுவனங்களின் நாயகர் - கலைஞர் கருத்தரங்கம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்றார்!

சென்னை, நவ. 27-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.11.2023) சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு "நிறுவனங்களின் நாயகர் கலைஞர்" கருத்தரங்கம் விழாவில் அமைக்கப்பட்ட சிறப்பு புகைப்பட கண்காட்சி மற்றும் கருத்தரங்கினைப் பார்வையிட்டார்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு கலைஞர் அவர்கள் தனது ஆட்சிக் காலங்களில் தமிழ்நாட்டு மக்களின் மேம்பாட்டிற்காக நிறுவிய நிறுவனங்களின் சாதனைகளைப் போற்றும் வகையில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு "நிறுவனங்களின் நாயகர் கலைஞர்" கருத்தரங்கம் மற்றும் சிறப்பு புகைப்பட கண்காட்சி நேற்று முன்தினம் (25.11.2023) சென்னை கலைவாணர் அரங்கத்தில் சிறப்பாக நடைபெற்றது.

முதலமைச்சர் அவர்கள் இந்த சிறப்பான விழா நிகழ்வில் பங்கேற்று "நிறுவனங்களின் நாயகர் கலைஞர்" என்கிற தலைப்பில் அமைக்கப்பட்ட சிறப்பு புகைப்பட கண்காட்சியின் ஒவ்வொரு அரங்கினையும் பார்வையிட்டார்கள். இந்த அரங்கில் கலைஞர் உருவாக்கிய நிறுவனங்கள், அவற்றின் செயல்பாடுகள் மற்றும் சாதனைகள் தொடர்பாக சிறப்பான புகைப்படங்கள் மற்றும் மாதிரி வடிவங்கள் இடம் பெற்றிருந்தன.

பின்னர், கலைவாணர் அரங்கில் நடைபெற்ற கருத்தரங்கிற்கு முதலமைச்சர் அவர்கள் வருகை தந்து முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு "நிறுவனங்களின் நாயகர் கலைஞர்" என்கிற தலைப்பில் முத்தமிழறிஞர் அவர்கள் உருவாக்கிய நிறுவனங்கள் மற்றும் தமிழ்நாட்டின் வளர்ச்சி குறித்த குறும் படத்தினைப் பார்வையிட்டார்கள். இதனைத் தொடர்ந்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சாதனைகளைப் போற்றுகின்ற வகையில் சமூக அரசியல், கல்வி, மருத்துவம் மற்றும் தொழில் வளர்ச்சி ஆகிய தலைப்புகளில் நடைபெற்ற கருத்தரங்கினைப் பார்வையிட்டார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தனது ஆட்சிக்காலங்களில் மக்களுக்கு பெரிதும் பயனளிக்கும் வகையில் பல்வேறு நிறுவனங்களை உருவாக்கி சாதனை படைத்துள்ளார்கள். அவர் உருவாக்கிய முன்னோடி நிறுவனங்கள் மற்றும் தொழில் கல்வி சார்ந்த நிறு வனங்கள் என 51 அரங்குகள் கொண்ட சிறப்பு புகைப்படக் கண்காட்சி நடைபெற்றது.

இதனை நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் "நிறுவனங்களின் நாயகர் கலைஞர்" நூற்றாண்டு விழாக் குழுத்தலைவர் கே.என். நேரு திறந்து வைத்தார். இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கருத்தரங்கினைத் தொடங்கி வைத்து சிறப்பு மலரினை வெளியிட்டார்.

இந்நிகழ்வில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி அவர்கள், நூற்றாண்டு விழாக்குழு இணைத் தலைவர்கள், சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்கள் மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சிறுபான்மை யினர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், மேயர் திருமதி ஆர்.பிரியா, தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர்சிவ் தாஸ் மீனா, துணை மேயர் மு.மகேஷ் குமார், நூற்றாண்டு விழாக்குழு உறுப்பினர்கள் டி.வி.எஸ் மோட்டார் நிறுவனத்தின் தலைவர் வேணு சீனிவாசன், வி.ஐ.டி.வேந்தர் பல்கலைக்கழக நிறுவனர் மற்றும் வேந்தர் முனைவர் ஜி.விஸ்வநாதன் அவர்கள், தாட்கோ தலைவர் உ.மதிவாணன், காவேரி மருத்துவமனை நிறுவனர் மற்றும் செயல் தலைவர் மரு.எஸ்.சந்திரகுமார் அவர்கள், உறுப்பினர் செயலர் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை இயக்குநர், பா.பொன்னையா, மற்றும் மக்கள் பிரதிநிதிகள் பல்வேறு துறைகளின் உயர் அலுவலர்கள் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

இக்கருத்தரங்கில், சமூகம் அரசியல் என்கிற தலைப்பில் உயர்கல்வித் துறை அமைச்சர் க.பொன்முடி, கல்வித்துறை தலைப்பில் வி.ஐ.டி. வேந்தர் பல்கலைக்கழக நிறுவனர் மற்றும் வேந்தர் முனைவர் ஜி.விஸ்வநாதன், இலயோலா மேலாண்மை கல்வி நிறுவனத்தின் (LIBA) இயக்குநர் அருள் முனைவர் ஜோ அருண் சேச அவர்கள், மருத்துவத் துறை என்கிற தலைப்பில் அப்பல்லோ குழும மருத்துவமனைகள் துணைத்தலைவர் மரு.ப்ரீதா ரெட்டி, கோயம்புத்தூர் கங்கா மருத்துவமனை தலைவர் மரு.பேராசிரியர் எஸ்.இராஜசேகரன், காவேரி மருத்துவமனை நிறுவனர் மற்றும் செயல் தலைவர் மரு.எஸ்.சந்திரகுமார், தொழில் துறை என்கிற தலைப்பில் டி.வி.எஸ் மோட்டார் நிறுவனத்தின் தலைவர் வேணு சீனிவாசன், இந்திய ஏற்றுமதி நிறுவனங்களின் கூட்டமைப்பு மற்றும் திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் முனைவர் அ.சக்திவேல் அவர்கள், கெவின் கேர் நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர் சி.கே.ரங்கநாதன் ஆகியோர் கருத்துரையாற்றினர்.

